# அரையாண்டுப்பொதுத்தேர்வு – திசம்பர் 2017

## மேனிலையிரண்டாமாண்டு பொதுத்தமிழ் இரண்டாந்தாள்

காலம்: 3 மணி **விடைக்குறிப்பு** மதிப்பெண்கள்: 80

ஆக்கம்: முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, நா.ம.மே.பள்ளி, ஏழாயிரம்பண்ணை, விருதுநகர் மாவட்டம்.

**விடைத்தாள் மதிப்பிடும்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைத் தவிராது பின்பற்றவேண்டும்.**

- நீலம், கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படவேண்டும்
- விடைகள் சொந்தநடையில் தெளிவாக அமைந்து ஒற்றுப்பிழை, எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்ப்பிழை, இலக்கணப்பிழையின்றியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குதல்வேண்டும்.
- எழுத்துருக்கள் அச்சில்வார்த்ததுபோலிருக்கவேண்டும்.
- எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால்மதிப்பெண்வீதம் குறைத்து, **அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணங்கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணின் நான்கிலொருபங்கிற்குமேல் மிகாமலிருக்கவேண்டும்.**
- **தவறான விடை**களை( X) குறியிட்டும், **தொடர்பிழை**களை அடிக்கோடிட்டும், **ஒற்றுப்பிழை**களை(^) குறியிட்டுக்காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல்வேண்டும்.
- மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியானகருத்திற்கும் தனித்தனியே(✓)குறியிடல்வேண்டும்.
- மிகையாக விடையிருப்பின் "**மிகை**" என்று குறிப்பிட்டு அடித்தல்வேண்டும்
- ஒரேவிடையானது மீண்டும்மீண்டும் எழுதப்பட்டிருப்பின்,"**மீண்டும்**"என்று குறிப்பிட்டு அடித்தல்வேண்டும்

| I | **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்:** | 3 x 4 = 12 |
|---|---|---|
| 1 | ➢ கையில் நூலெடுத்துப்படித்தற்குரிய காலங்கிட்டாத பணியாளர்களுக்கும் படிக்கத்தெரியாதவர்களுக்கும் நல்லறிவுபுகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது.<br>➢ கேட்போர்க்கும் காண்போர்க்கும் இன்பச்சுவை அளித்தல்.<br>➢ கேள்வி இன்பத்தோடு காட்சியின்பம் தருவது.<br>➢ இயற்றமிழ் இசைத்தமிழ் இவ்விரண்டின் அடியாய்ப்பிறந்தது.<br>➢ பிறநாட்டு மொழிப்புலவர்கள் நாடகங்களை மிக்க மேன்மையுடையவாய் மதிக்கின்றனர். | 1<br>1<br>1<br>1 |
| 2 | ➢ மேனாட்டினர் தாம்பிறந்தநாட்டின்பொருட்டு பிறநாட்டவரை வருத்துவதற்கே ஆகாயவிமானங்களையும் நீர்மூழ்கிக்கலங்களையும் நச்சுக்காற்றையும் பிறவற்றையும் கண்டனர்.<br>➢ தங்கள் நாட்டையே கடவுளாய்க்கருதும் இவர்களுக்குப் பிறநாட்டவரிடமும் கடவுளிருத்தல் புலனாவதில்லை.<br>➢ மற்றவர்க்கும் பசி முதலியனவுண்டு என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.<br>➢ எல்லாநாட்டவர்களும் சகோதரர் என்பதை உணராத இவர்கள் 'நாடு' என்னும் பற்றால் சமரசத்தை இழக்கிறார்கள். | 1<br>1<br>1<br>1 |
| 3 | ➢ **வோர்ட்ஸ்வொர்த்:** ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப்பொங்கி வழிவதுதான் கவிதை.<br>➢ முன்பு கிளர்ந்த ஓர் உணர்ச்சிப்பெருக்கை மீண்டும் அமைதி நிலையிலிருந்து நினைவிற்குக்கொணரும்போதுதான் கவிதை தோன்றுகிறது.<br>➢ **கோலரிட்ஜ்:** சொற்களைச் சிறந்தமுறையில் வைப்பது உரைநடை.<br>➢ சிறந்தசொற்களைச் சிறந்தமுறையில் வைப்பது கவிதை. | 1<br>1<br>1<br>1 |
| 4 | ➢ வயலில் தன்வளையின்பக்கத்தில் விளைந்துகிடக்கும் நெற்பயிரை எலி கறித்து, தன்வளைக்குள் சேர்ப்பதுபோன்ற எளியமுயற்சியைப் பழந்தமிழ்மாந்தர் அருவருத்தனர். | 1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ➢ புலி, தான்செல்லும் விசையினால் தனது இடப்பக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் பன்றியைச் சிறிதும் கண்ணெடுத்துப்பாராது.<br>➢ மறுநாள், ஒரு பெரிய யானையோடு போரிட்டு, அதனைத் தனது வலப்பக்கத்தில் வீழ்த்தி, அதனையே உணவாய்க்கொள்கின்ற புலியைப்போன்ற பெருமுயற்சியுடையமக்களை மதித்துப்போற்றினர்.<br>➢ தாம் பெரிது முயன்றுதேடும் பொருளையே அவர்கள் தமக்குரிய தாய்க்கருதினர். தமது செயலால் வருவதேயாயினும் எளிய முயற்சியில் வருவதை அவர்கள் மேன்மையாய் மதியார். | 1<br>1<br>1 |
| **5** | ➢ உலகில் சமரசம் பரவாமைக்குக்காரணம் பலபடக்கூறலாம்.<br>➢ மனிதனிடத்தில் உள்ள அழுக்காறு, அவா, வெகுளி முதலியன அவனை, சமரசஞானியாக்குவதில்லை.<br>➢ சமரசத்தைப்பற்றி, பேசுதலும் எழுதுதலும் எளிது. அதை நடைமுறைப்படுததுதல் அரிது.<br>➢ எனவே, மனிதன் சமரசத்தைப்பற்றி, பேசுவதைக்காட்டிலும் அதை நடைமுறையில் கொண்டுவர முயல்வதே அறிவுடைமையாகும். | 1<br>1<br>1<br>1 |
| **II** | **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்:** | **3 x 4 = 12** |
| **6** | ➢ எல்லாநாட்டிற்கும் எந்நிலைநாகரிகத்திலும் ஆவானது அருமையாய்ப் போற்றப்பட்டது.<br>➢ தமிழரின் முன்னோர்க்கு, குறிஞ்சியில் ஆத்தொடர்பு இருந்திருத்தல் வேண்டும்.<br>➢ முல்லைநிலத்தில் வாழ்ந்த ஆயர், ஆட்டையும் மாட்டையும் வளர்த்து அவற்றின் ஊனையும் பாலையும் உண்டுவாழ்ந்தனர்.<br>➢ ஆட்டினும் மாட்டையே சிறப்பாய் வளர்த்தனர். அவை மேய்ப்பவர் ஆயர் எனப் பெயர்பெற்றனர். | 1<br>1<br>1<br>1 |
| **7** | ➢ அறுசுவை உணவுண்டவன் - உப்பில்லாக்கூழ் குடிக்கிறான்.<br>➢ ஆசனத்தில் அமர்ந்து உண்டவன் - நடந்துகொண்டே குடிக்கிறான்<br>➢ மனைவி ஊட்ட உண்டவன் - தனித்து ஓரிடத்தில் குடிக்கிறான்.<br>➢ மறுகவளம் வேண்டாவென்று மறுத்து உண்டவன் - ஒருகவள உணவும் இல்லாத ஏழையாய் இரக்கிறான்.<br>➢ செல்வரும் வறிஞராதல் கூடும். ஆகவே, செல்வம் உள்ளபோதே அறஞ்செய்க. | 1<br>1<br>1<br>1 |
| **8** | ➢ முடி, கோல், கட்சி, தேர்தல் முதலியன மனிதவாழ்வுக்கு உதவ வந்த கருவிகள்.<br>➢ அவையனைத்தும் சிறியவை, மனிதவாழ்வே பெரியது.<br>➢ மனிதவாழ்வுக்கு அடிப்படையானவை கூட்டுறவும் உழைப்புமாகும்.<br>➢ கூட்டுறவுக்கு வரும் இடையூற்றை வெல்ல அறப்படையும், உழைப் புக்குப் பஞ்சம்வந்தால் அதைவெல்ல உழுநிலமும் வேண்டும்.<br>➢ சுரண்டுவோரும் சுரண்டப்படுவோரும் இல்லாத சாதி சமயம் கட்சி முதலியவற்றால் ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைய இதுவே வழியாகும். | 1<br>1<br>1<br>1 |
| **9** | ➢ கடவுளர் உருவங்களும் அரச அரசியர் உருவங்களும் பெட்டி, பல்லக்குத்தண்டு போன்ற பொருள்களும் தந்தத்தால் செய்யப்பெற்றிருந்தன.<br>➢ திருவரங்கத்தில் திருமலைநாயக்கமன்னர், அவர்தம் பட்டத்து அரசியோடு தந்தத்தில் காட்சிதருகிறார்.<br>➢ கடவுள் வடிவங்களும் தந்தத்தில் சிறிய அளவில் நிறையவுள்ளன | 1<br>1<br>1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ➢ மதுரைக்கு அருகிலுள்ள அழகர்கோவிலிலும் அளவில் சிறியதான தந்தச்சிற்பங்கள் பெருமளவில் உள்ளன. | 1 |
| **10** | ➢ காளை, விடலை என்னும் பெயர்கள் உவமையாகுபெயராய் மறவர்க்கும் குறும்பரசர்க்கும் வழங்கிவந்தன.<br>➢ இடையூற்றைப் பொருட்படுத்தாமல் எடுத்த செயலை முடிக்கும் ஆற்றலுடையவன் 'பகடு' எனப் போற்றப்பட்டான்.<br>➢ இளைஞரின் வலிமையை அறிவதற்கு 'ஏறுதழுவல்' அளவாய்க் கொள்ளப்பட்டது.<br>➢ முல்லைநிலத்து ஆயர், ஏறுதழுவிய இளைஞர்க்கே தங்கள் மகளை மணம் முடித்தளித்தனர். | 1<br>1<br>1<br>1 |
| **III** | **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்:** | **1 x 6 = 6** |
| **11** | ➢ **உயர்மொழி:** தான் வழங்கும் நாட்டிலுள்ள பல மொழிகளுக்குத் தலைமையும் அவற்றின் மிக்க மேன்மையுமுள்ள மொழியே உயர்மொழி.<br>➢ தமிழ்மொழியானது தெலுங்கு முதலிய மொழிகளுக்கெல்லாம் தலைமையும், அவற்றினும் மிக்கமேன்மையும் உடைமையால் அஃது உயர்மொழியே.<br>➢ **தனிமொழி:** தமிழ் தனித்தியங்கவல்ல ஆற்றல்சான்ற தனிமொழி.<br>➢ பிறமொழிகளின் உதவி இல்லாமல், சிறிதும் இடர்ப்பாடு இல்லாமல் தனித்து இனிமையாய் இயங்கவல்லதாகும்.<br>➢ **செம்மொழி:** திருந்தியபண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழியாத் தமிழ் அமைந்திருக்கிறது.<br>➢ தமிழில் இடர்ப்பட்ட சொல்முடிபுகளும் பொருள்முடிபுகளுமில்லை.<br>➢ சொல்பவன் கருதிய பொருளைக் கேட்பவன் தெளிவாய் உணரக் கூடியதாய் இருக்கிறது.<br>➢ **தூயமொழி:** தமிழில் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தம் அடைந்துள்ளது.<br>➢ தமிழில் நாகரிக முதிர்ச்சிக்கு ஏற்ப, சொற்கள் தோன்றியுள்ளன.<br>➢ அச்சொற்கள் பிறமொழிச்சொற்களல்லாமல் தமிழ்ச்சொற்களே மிகுந்துள்ளன. | 1<br>1<br>1<br>1<br>1<br>1 |
| **12** | ➢ இச்சகம்பேசிவாழும் மாந்தருள் ஒருவன் "போற்றி பாரியே, போற்றி காரி, போற்றி ஓரி, போற்றி பேகா" என்று உருப்போடுகிறான்.<br>➢ அவன், ஒரு புதுப்பணக்காரனது வீட்டினுள் நுழைந்து, "போற்றி போற்றி" எனத்தொடங்கி, "தங்கள் அருள்நோக்கி வாழ்கிறேன். பயிர்க்கு மழை எப்படியோ அப்படியே தாங்கள் என்போன்ற வறியவர்களுக்கு" என்று பலவாறு அடுக்குகிறான்.<br>➢ போற்றியே போற்றியே யென்று புதுச்செல்வம்<br>தோற்றியார் கண்ணெலாம் தொண்டேபோல் - ஆற்றப்<br>பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தெல்லாம்<br>வயிற்றுப் பெருமான் பொருட்டு - முனைப்பாடியார்<br>➢ இச்சகம் பேசுவோன் இழிந்தவன் என நேரேகூறாமல், அவன் வயிற்றை மகேசுவரனாக்கிச் சிறப்பிப்பதைப்போன்று சிறுமைப்படுத்தியுள்ளார்.<br>➢ வயிறாகிய தம்பிரான் என்னும் கடவுளைக்காக்க மனிதர் எத்தனை பொய்யும் புனைசுருட்டும் பேசி வாழ்கிறார்கள்.<br>➢ இப்படி, பொய்பேசி வயிறுவளர்க்கவேண்டுமா என்று 'இச்சகம் பேசுதல் இழிவு' என்பதனை அறநெறிச்சாரம் எடுத்துரைக்கிறது. | 1<br>1<br>1<br>1<br>1<br>1 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| IV | துணைப்பாடம்: | 2 x 10 = 20 |
| | இரண்டுபக்கவளவில் கருப்பொருளும் சுவையுங்குன்றாமல் எழுதுதல்<br>➢ பத்திப்பிரித்தல் - உட்தலைப்பிடல் - கதைமாந்தர்பெயர்கள் சரியாக எழுதுதல்வேண்டும்.<br>➢ கதைத்தலைப்பு - 1 மதிப்பெண்<br>➢ ஆசிரியர்பெயர் - 1 மதிப்பெண்<br>➢ முன்னுரை - 1 மதிப்பெண்<br>➢ (ஏதேனும் ஆறு) உட்தலைப்புகளுடன் கதைச்சுருக்கம் - 6 மதிப்பெண்<br>➢ முடிவுரை - 1 மதிப்பெண் | |
| | கதைத்தலைப்பு: பால்வண்ணம் பிள்ளை<br>ஆசிரியர்பெயர்: புதுமைப்பித்தன்<br>முன்னுரை –<br>பால்வண்ணம் பிள்ளையின் பண்புநலன்கள் - குடும்பநிலை - மெக்ஸிகோ எங்கிருக்கிறது? - மனைவியின் வரவேற்பு - கன்றுடன் பசுமாடு வாங்குதல் - பால்வண்ணம் பிள்ளையின் பிடிவாதம் - மாடுவிற்பனை –<br>முடிவுரை – | 10 |
| | (அல்லது)<br>கதைத்தலைப்பு: சட்டை<br>ஆசிரியர்பெயர்: ஜெயகாந்தன்<br>முன்னுரை –<br>எது துறவு? –சித்தர்களின் வழியில் துறவறம் - கோவிலில்வாழக்காரணம் - பூந்தோட்டச்சாமியார் தோற்றம் - அனைவர்க்குந் தொண்டன் -மாணிக்கம் செட்டியாரின் மனைவி - பத்தரிகைச்செய்தியும் விமர்சனமும் - தருமம் அழியாது - படமாகியவனை வணங்கினார் சாமியார் - பூந்தோட்டத்துச் சாமியாரின் சிந்தனையைத்தூண்டிய வாசகங்கள் - எவர் உண்மையான துறவி - கம்பீரமாய்க்காட்சியளித்த பூந்தோட்டத்துச்சாமி - ஆத்மாதான் முக்கியம்<br>முடிவுரை – | 10 |
| 13 | (அல்லது)<br>ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுதல்<br>➢ நாடகவமைப்பு (காட்சி, களம், காலம், உறுப்பினர்) – 5 மதிப்பெண்<br>➢ நாடகவடிவில் (பாத்திரங்களின் உரையாடல் வடிவில்)எழுதுதல் – 5 மதிப்பெண்<br>➢ குறிப்பு: (நாடகவடிவில் எழுதாமல் கதைச்சுருக்கமாக எழுதியிருப்பினும் 5 மதிப்பெண்கள் வழங்கலாம்) | |
| | 'மகன்' **ஆசிரியர்:** பா. செயப்பிரகாசம் | 10 |
| | (அல்லது)<br>'பழிக்குப்பழி' **ஆசிரியர்:** வல்லிக்கண்ணன் | 10 |
| 14 | மனங்கவர்ந்த கதைமாந்தர் குறித்துத்திறனாய்வு<br>➢ முன்னுரை - 1 மதிப்பெண்<br>➢ கதைமாந்தரது பெயர் - 1 மதிப்பெண்<br>➢ கதைச்சுருக்கம் - 2 மதிப்பெண்<br>➢ கதைப்போக்கு, கதைமாந்தரது பண்புகளை விளக்குதல் - 5 மதிப்பெண்<br>➢ முடிவுரை - 1 மதிப்பெண்<br>➢ குறிப்பு: (கதைமாந்தர் திறனாய்வை, கதையாகவெழுதினால் 5 மதிப்பெண்கள் வரை வழங்கலாம்) | |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ‘கிழிசல்’ **ஆசிரியர்:** நாஞ்சில்நாடன் | 10 |
| | **(அல்லது)**<br>‘பழிக்குப்பழி’ **ஆசிரியர்:** த. நா. சேனாபதி | 10 |
| | **(அல்லது)**<br>**கற்பனையில் புனைந்து ஒரு கட்டுரை வரைதல்:**<br>➢ **கதைத்தலைப்பு - 1 மதிப்பெண்**<br>➢ **கதைத்தொடக்கம் - 1 மதிப்பெண்**<br>➢ **கருப்பொருள் வளர்ச்சி - 3 மதிப்பெண்கள்**<br>➢ **கற்பனைத்திறன், கதைச்சிக்கல் - 4 மதிப்பெண்கள்**<br>➢ **கதைமுடிபு - 1 மதிப்பெண்** | |
| | நீவிர் விரும்பிய ஒரு சுற்றுலாவுக்குச்செல்ல முடியாது தடையேற்பட்டு அதனால் வருந்தியதாக ஒருநிகழ்வைப் புனைந்து ஒரு கட்டுரை. | 10 |
| | **(அல்லது)**<br>சொந்தவீடு கட்டிக்கொள்ள கடன்வாங்கி அல்லற்பட்ட இருவர் சந்தித்து உரையாடுவதுபோல நும் கற்பனையில் ஒரு கட்டுரை. | 10 |
| **V** | **இலக்கியநயம் பாராட்டல்:** | 1 x 10 = 10 |
| **15** | ➢ **முன்னுரை - 1 மதிப்பெண்**<br>➢ **திரண்டகருத்து - 2 மதிப்பெண்கள்**<br>➢ **மையக்கருத்து - 1 மதிப்பெண்**<br>➢ **தொடைநயம்(எதுகை, மோனை, இயைபு), அணிநயம், சந்தநயம், முரண்நயம், உவமைநயம், உருவகநயம், கற்பனைநயம் போன்றவற்றுள் ஏற்புடைய எவையேனும் நான்கு நயங்கள் - 4 மதிப்பெண்கள்**<br>➢ **தலைப்பு - 1 மதிப்பெண்**<br>➢ **முடிவுரை - 1 மதிப்பெண்**<br>➢ **குறிப்பு: (முன்னுரை, முடிவுரை, கருத்து, எதுகை, மோனை இருப்பின் 6 மதிப்பெண்கள் வழங்கலாம்)** | |
| | ‘புதியதோர் உலகம் செய்வோம்’ – பாரதிதாசன் பாடல் | 10 |
| **VI** | **எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம்:** | 3 x 2 = 6 |
| | ➢ **குறிப்பு: (தொடர்புடைய பழமொழி எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)** | |
| **16** | எலிவளையானாலும் தனி வளை வேண்டும். | 1 |
| **17** | பொறுத்தார் பூமியாள்வார் | 1 |
| **18** | எழுதுகோல், அறிஞர்தம் உழவுகோல். **(அல்லது)**<br>வாள்முனையைவிட எழுதுகோல்முனை வலிமையானது. | 1 |
| **19** | தோல்வியே வெற்றிக்கு முதல்படி. | 1 |
| **20** | பதறாத செயல் சிதறாது. **(அல்லது)** பதறிய செயல் சிதறும். | 1 |
| **21** | பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான். | 1 |
| **VII** | **பழமொழியை வாழ்க்கைநிகழ்வில் அமைத்தல்:** | 1 x 4 = 4 |
| **22** | ➢ **பழமொழி விளக்கம் – 1 மதிப்பெண்**<br>➢ **ஏற்புடைய வாழ்க்கைநிகழ்வு – 3 மதிப்பெண்**<br>**வாழ்க்கைநிகழ்வின்றி கருத்துமட்டும் விளக்கியிருந்தால் – 2 மதிப்பெண்**<br>அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்<br>ஆ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு<br>இ) ஆழம் அறியாமல் காலை விடாதே **(ஏதேனும் ஒன்றுமட்டும்)** | 4 |
| | **(அல்லது)**<br>➢ **எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது கவிதை**<br>சிற்பி **(அல்லது)** ‘எதிர்காலத்தமிழகம்’ | 4 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **VI – VIIக்குப் பதிலாக செவிமாற்றுத்திறனாளி மாணவர்க்கான மாற்றுவினா** | | |
| | **பத்தியைப்படித்து விடைதருக: (எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்)** | 5 x 2 = 10 |
| 16 | அறிவியல் சாதனைகளில் மகத்தானது கணிப்பொறி எனப்படும் கம்ப்யூட்டர். | 2 |
| 17 | கம்ப்யூட்டர் என்பதற்கு கணக்கிடுதல் என்பது பொருள். | 2 |
| 18 | டிஜிட் என்பதற்கு எண்கள் விரல் என்பது பொருள். | 2 |
| 19 | கம்ப்யூட்டர், டிஜிட் என்பன இலத்தீன் மொழிச்சொற்கள். | 2 |
| 20 | கணிப்பொறியின் முன்னோடிகள் நம் நாட்டவர். | 2 |
| 21 | தனித்தன்மை கொண்ட கணிப்பொறியை டாக்டர். ஜான் பாண் நாய்மன் என்பவர் கண்டுபிடித்தார். | 2 |
| 22 | 1945ஆம் ஆண்டிற்குப்பிறகு கணிப்பொறிவளர்ச்சியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. | 2 |
| | | |
| **VIII** | **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்:** | 10 x 1 = 10 |
| 23 | **நல்லனவும் கெட்டனவும்** பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. | 1 |
| 24 | வெந்தயச்செடிகளின்மேல் மின்னிடும் தங்கப்பூக்கள். | 1 |
| 25 | கபிலபரணர் **வளர்பிறை** ஒளியில் **சுடுசோறும் காய்கறியும்** உண்டனர். | 1 |
| 26 | “**தொலைக்காட்சி**யில் **தொடர்களைப்**பார்க்காவிட்டால் **வாழ்க்கையே வெறுத்துவிடும்**” என்கிறாள் பாட்டி. | 1 |
| 27 | மயில் **அகவ**, குயில் **கூவ**, கிளி **பேசியது.** | 1 |
| 28 | **விடிவதற்குள் வெற்றிலை போடுவது ஒரு பழக்கமா?** | 1 |
| 29 | வலை – வளை, **(அல்லது)** காண் – கான் (**பொருள்வேறுபாட்டுடன் தனித்தனித்தொடர்கள் இருப்பின் உரிய மதிப்பெண் வழங்கவும்)** | ½ + ½ |
| 30 | **வணக்கம்** என்று **நெடுஞ்சாண்கிடையாய்** விழுந்தவனை **வாழ்த்தினேன்** | 1 |
| 31 | இளைஞர்கள் மன்றம் அமைத்து தமிழ் வளர்க்க முடிவு செய்தனர். | 1 |
| 32 | சமரசம் வாழ்வில் நுழைந்து ஆட்சிபுரியின், உலகில் போர் ஏது? பூசல் ஏது? புரட்சி ஏது? | 1 |

www.Padasalai.Net



**ஆக்கம்:**
**முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, தமிழாசிரியர்,**
**நாடார் மகமை மேனிலைப்பள்ளி,**
**ஏழாயிரம்பண்ணை – 626 201,**
**சாத்தூர்(வழி), விருதுநகர் மாவட்டம்.**
**WhatsApp 7806868246**
**வலைப்பூ: annaachi7k.blogspot.com**